**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 241/2015**

**PW1 – திருமதி. சுமதி, க/பெ. முனிவேல்**

**05.04.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**நேரம் 11.30 மணி**

அயிட்டம் 1ல் உள்ள சொத்து அனுராதா என்பவருக்கு விற்கப்பட்டது என்றால் சரிதான். அயிட்டம் 1ல் உள்ள சொத்து பாண்டியன் பெயரில் இருந்தது அவா் மேஜா் ஆனவுடன் அவருக்குமட்டுமே பாத்தியப்பட்ட சொத்தை அனுராதாவிற்கு ஆவண எண் 5887/2016 தேதி 10/06/2016ல் சாா்பதிவாளரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது கூட்டுகுடும்பமாக இருக்கும்போது பாண்டியன் மைனராக இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்து அதில் எனக்கும், என் அம்மாவிற்கும் பாத்தியம் உள்ளது. என் தந்தை பெயரில் சொத்து வாங்கப்பட்டிருந்தால் எனக்கும் என் அம்மாவிற்கும் உரிமையுள்ளது என்றாலும் பாண்டியன் பேரில் உள்ள சொத்து என்பதால் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் அனுராதாவை பிரதிவாதியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சொத்தில் அனுராதா பட்டா வாங்கி சொத்தை அனுபவித்து வருகிறாா் என்றால் சரிதான். அனுராதாவை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கில் பரிகாரம் கோராமல் பிரமாண வாக்குமூலத்தில் மட்டும் ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டுமென கோரமுடியாது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு திருமணமான பிறகு தான் அயிட்டம் 1 சொத்து வாங்கப்பட்டது ஆகவே அது கூட்டுகுடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல. திருமணம் ஆன பிறகு தான் வாங்கப்பட்டது நான் சீட்டு போட்ட பணத்தில் தான் வாங்கப்பட்டது. நான் வள்ளியம்மாள் என்பவரிடம் சீட்டு போட்டேன். நான் வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அவ்வாறு சீட்டு எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. சி.ஜி. அண்ணாமலையிடமிருந்து ஆதிமூலம் பவர் வாங்கவில்லை என்று கூறியுள்ளேன். ஆறுமுகம் என்பவர் தான் பவர் வாங்கியிருந்தார். சர்வே எண் 671, விஸ்தீரனம் 1840 சதுர அடியாகும். வழக்கின் அயிட்டம் 2 சொத்திற்கு சி.ஜி. அண்ணாமலை தான் உரிமையாளர் என்றால் அது தவறு. அண்ணாமலை என்பவரை பாண்டியன் மிரட்டி தான் சொத்தை கிரையம் செய்துள்ளார் என்று வாதுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. பிரதிவாதி பாண்டியன் ஆறுமுகம் என்பவரிடமிருந்து அயிட்டம் 2 குறிப்பிட்டுள்ள சொத்தை தனது சொந்த பணத்தை கொண்டு பாண்டியனின் மைனர் மகனான சேதுவிற்கு கிரையம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் பாண்டியன் பிரபாகரனுக்கு விற்றுள்ளார். பிரதிவாதி பாண்டியன் தனது மகனான சேதுவிற்கு கிரையம் பெற்ற ஆவணம் 10933/2011 தேதி 12/09/2011 பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்னர் பிரதிவாதி பிரபாகரனுக்கு பத்திர ஆவண எண் 2833/2016 தேதி 16/03/2016 அன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரி என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய வழக்கின் வாதுரையில் மேற்படி பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். வழக்கில் பிரபாகரனை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அயிட்டம் 3 சொத்து சர்வே எண் 223, விஸ்தீரனம் 3 செண்ட் நிலம் எங்குள்ளது என்றால் பாக்கம் கிராமம் என் வீட்டிற்கு எதிரில் காலிமனை உள்ளது. மேற்படி காலிமனை என் தந்தை பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது என் தம்பி மைனராக இருந்தபோது என் திருமணத்திற்கு முன்பு என் தந்தையால் வாங்கப்பட்டது. மேற்படி காலிமனை என் தெருவில் வசிக்கும் நீலகண்டன் என்பவரிடம் வாங்கப்பட்டது என்றாலும் அது பிரதிவாதி பாண்டியன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதுவும் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி பாண்டியன் பெரியல் உள்ள சொத்தை கூட்டுகுடும்ப சொத்து என கூற முடியாது என்றால் சரியல்ல. மேற்படி அயிட்டம் நெ. 3ல் உள்ள சொத்தை பட்டா மற்றும் சிட்டா, அடங்கல் ஆகியவை பாண்டியன் பெயரில் மாற்றலாகி அதை அவர் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு உரிமையில்லை என்றால் மேற்படி பட்டா, சிட்டா

ஆகியவற்றை ரத்து செய்ய வருவாய் துறையினரிடம் விண்ணப்பம் கோரியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் எந்த விண்ணப்பமும் வருவாய் துறையினரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அயிட்டம் நெ. 4ல் சர்வேண் 385, பாக்கம் கிராமத்தில் விஸ்தீரனம் 55 சென்ட் நிலமானது எந்த வகைப்பாடு என்றால் வகைபாடு தெரியாது அது பட்டா நிலமாகும். நீர்பிடிப்பில்லுள்ள அரசு நிலம் என்றால் சரியல்ல. மேற்படி அயிட்டம் நெ.4ல் உள்ள சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அது ஏரி புறம்போக்கு நிலம் என்பதால் தான் அயிட்டம் நெ. 4க்கு சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அயிட்டம் நெ. 4ல் உள்ள சொத்து என் பாட்டி என் தாயாருக்கு சீதனமாக கொடுத்த சொத்து என்றால் சரிதான். என் அம்மா பச்சையம்மா அவர் தங்கை முனியம்மா திருமணத்திற்கு பணம் கொடுத்து உதவியதால் பச்சையம்மாவின் அம்மா சரசம்மா என் அம்மா பச்சையம்மாவிற்கு 2001ல் நிலத்தை கொடுத்தார் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. சரசம்மாள் தற்போது உயிருடன் உள்ளார். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளாரா என்றால் உள்ளார். அயிட்டம் நெ.5ல் சர்வே எண் 860/14ல் 5 சென்ட் ல் 2.5 சென்ட் நிலமானது மூர்த்தியின் மகன் ரகு என்பவர் விடுதலை பத்திரம் மூலம் பிரதிவாதி பாண்டியன் என்பவருக்கு எழுதி கொடுத்தார் என்றாலும் அந்த ஆவண எண் 7735/2013 தேதி 10/06/2013 பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அவர் பெயரில் பதிவு செய்யப்பட்டு அவர் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளது என்றால் சரிதான். பாண்டியன் ரகுவை மிரட்டி பத்திர பதிவு செய்துள்ளார். காவல் நிலையத்தில் அதுகுறித்து புகார் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பிரச்சனையில் ரகு மருந்துகுடித்து மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ரகுவிடம் 2.5 சென்ட்-க்கான பணத்தை கொடுத்து தான் இந்த சொத்திற்கான விடுதலை பத்திரத்தை பாண்டியன் ரகுவிடமிருந்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை ரத்து செய்ய கோரி வருவாய் துறையினரிடம் எந்த விண்ணப்பமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.அயிட்டம் நெ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள டிராக்டர் என் தந்தை உயிருடன் இருக்கும்போது வாங்கப்பட்டது. அது வாங்கி 30 வருடங்களுக்கு மேல் இருக்கும். மேற்படி டிராக்டரை 15 வருடத்திற்கு மேல்

இயக்குவதற்கு Fitness இல்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி அயிட்டம் நெ.6ல் பாகம் கேட்டு இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் அனைத்து அசல் பத்திரங்களும் பாண்டியன் வசமுள்ளதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை கேட்டும் தரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான பத்திரத்தின் அசலை யாருக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் அயிட்டம் 1 முதல் 6 வரையிலான சொத்து கூட்டுகுடும்ப சொத்து அல்ல என்றாலும் அதில் எனக்கு பாகம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>நேரம் 12.15 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.